‘பசுமை சைதை’ சார்பில் புயல் காரணமாகச் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக

# 5000 மரக்கன்றுகளை நடும் பணி; பருவத்தே பயிர் செய்யும் முயற்சி!

## சமூக வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!





**சென்னை, டிச. 23–**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:**

காலநிலை மாற்றத்தை உலகளாவிய கூட்டு நடவடிக்கையின் வழியாக மட்டுமே எதிர்கொள்ள முடியும். அதுவே தீர்வாகும்!

இந்த விழிப்புணர்வுடன், ஆறு ஆண்டுகளுக்கு முன்பே என்னால் தொடங்கி வைக்கப்பட்டு, 1 லட்சத்து 10 ஆயிரம் மரங்களை நட்டுப் பராமரித்து வரும் பசுமை_சைதை சார்பில் Cyclone Michaung காரணமாகச் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக 5000 மரக்கன்றுகளை நடும் பணி ‘பருவத்தே பயிர் செய்யும்’ முயற்சி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





தூத்துக்குடி குடியிருப்பு பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று முன்தினம் காலை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நல திட்ட உதவிகளை வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், வி.லெட்சுமிபுரம் ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.10.90 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 15.12.2023 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.நா.கவிதப்பிரியா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் - ஏரல் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# கனிமொழி கருணாநிதி எம்.பி. படகில் சென்று நிவாரணம்!

## இரு சக்கர வாகனத்திலும் சென்று ஆறுதல்!

தூத்துக்குடி, டிச. 23 -

ஏரல் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படகிலும் பைக்கிலும் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார் கனிமொழி கருணாநிதி எம்.பி. தூத்துக்குடி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் பெய்த அதிகன மழையால், மாவட்டத்தில் பெரும்பாலான பகுதி களில் வெள்ள நீர் சூழ்ந்து, மக்களின் இயல்பு வாழ்க்கைப் பாதித்தது.

இந்த நிலையில், வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக் குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தொடர்ந்து மீட்புப் பணி மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

20.12.2023 அன்று ஏரல் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தேசிய பேரிடர் மீட்புப் படையினருடன் இணைந்து படகில் பயணித்து, மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டு அறிந்தார்.

மேலும், வாக்கி டாக்கி மூலம் பிரச்சினையின் தீவிரத்தை அரசு அதிகாரிகளுக்கு உணர்த்தி பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர், பால், பிஸ்கட், குழந்தைகளுக்கான பால் பவுடர் மற்றும் சமைக்கத் தேவைப்படும் அரிசி, பருப்பு, காய்கறிகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வேண்டும் என்று கோரினார்.

அதனைத் தொடர்ந்து, மீட்புப் படையினர் கனிமொழி கருணாநிதி எம்.பி.கோரிய நிவாரணப் பொருட்களைப் படகில் கொண்டு சேர்த்தனர்.

பின்னர், கனிமொழி கருணாநிதி அவர்கள் மக்கள் கோரிய உணவு, தண்ணீர், பால் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி, வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். ஏரல் சுற்றியுள்ள கிராமங்களுக்கு டூவீலரில் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்.

